**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 24.06.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் காலநிலை மாற்றத்தை விவரிக்கும் 'அக்ரோநோவா 2022'**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மாணவ சமுதாயத்திற்கு வேளாண்மை சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக **04.07.2022** மற்றும் **05.07.2022** ஆகிய இரண்டு நாட்கள் '**அக்ரோநோவா-2022**'நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வானது பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு திறமைகளை வெளிப்படுத்தும் மேடையாகவும் அதேசமயத்தில் வேளாண்மை பற்றிய புரிதலை கொடுக்கும் தளமாகவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பள்ளி மாணவர்களுக்காக வினாடி வினா, பேச்சுப்போட்டி, கவிதைபோட்டி, கிறுக்கல்கள், வார்த்தை விளையாட்டு போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன. கல்லூரி மாணவர்களுக்காக வினாடி வினா, பேச்சுப்போட்டி, கவிதை போட்டி, புதையல் வேட்டை, களி மண்ணில் கைவினை, பானை ஓவியம், மீம்ஸ் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் ஒரு அங்கமாக 21.06.2022 அன்று முனைவர். நா. வெங்கடேச பழனிசாமி (முதன்மையர் வேளாண்மை) அக்ரோநோவா-2022ற்கான சிற்றேடை வெளியிட்டுள்ளார். மாணவர்கள் போட்டிகளில் பங்கு பெற **www.agronova2k22.com** என்ற இணையதளம் மூலம் இலவசமாக பதிவு செய்து பங்கேற்கலாம். மேலும் இந்நிகழ்வில் காட்சிப்படுத்தப்படும் வேளாண்மை சம்பந்தமான மாதிரிகள் மற்றும் வேளாண்மையில் ஏற்படவுள்ள புதுமைகள் சம்பந்தமான புகைப்படங்களையும் பொதுமக்கள் பார்வையிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**